DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.140/2021**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சமயபாண்டி |
| Father Name | : | சங்கரன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.
( 1, 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மல்லபுரத்தில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன இரத்தினவேல் என்பவரை தெரியும். அவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள். கடந்த 2020ம் வருடம் மார்ச் மாதம், தேதி ஞாபகமில்லை இரவு சுமார் 07.00, 07.30 மணியளவில் எங்கள் ஊர் காளியம்மன் கோவில் மந்தை அருகில் உட்கார்ந்து நான், எனது நண்பர் நல்லுச்சாமி மற்றும் நிறைய பேர் மது அருந்தி கொண்டிருந்தோம். ஊருக்குள் சண்டை, சப்தம் கேட்டது. சப்தம் கேட்டவுடன் பசங்கள் எல்லோரும் ஊருக்குள் வந்தோம். அங்கு ரேசன் கடைக்கு பக்கத்தில் ஒரே கூட்டமாக இருந்தது. அப்போது அங்கு இரத்தினம் என்பவர் இரத்த காயத்துடன் கிடந்தார். எல்லோரும் சுற்றி பார்த்துக்கொண்டிருந்தார்கள், யாரும் அவரை தூக்கவில்லை. இரத்தின வேல் வீட்டில் உள்ளவர்கள் வந்து என்னிடமும், நல்லுச்சாமி என்பவரிடனும் தூக்கச்சொன்னார்கள். நாங்கள் முத்து என்பவரின் இருசக்கர வாகனத்தில் இரத்தினவேலுவை நடுவில் வைத்து முத்துவேல் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் உட்கார்ந்து இரத்தினவேலுவை

பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன், மல்லபுரம் விலக்கில் வந்து இருசக்கர வாகனம் பெட்ரோல் இல்லாமல் நின்றுவிட்டது. பக்கத்தில் இருந்த ரகுபதி ஒர்க்ஷாப்பிற்கு வந்து அங்கிருந்த மணி என்பவரின் இருசக்கர வாகனத்தில் வைத்து எழுமலையிலுள்ள சுசி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு ஆஸ்பத்திரியில் பார்க்க முடியாது என்று சொன்னவுடன், தனியார் ஆம்புலன்ஸ் மூலம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். கொரோனா காலமாக இருந்ததால் அந்த மருத்துவமனையில் சிகிச்சைக்கு எடுக்கமாட்டோம் என்று சொன்னதால், அங்கிருந்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். இரத்தினவேல் இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டோம்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 24.03.2020ம் தேதி இரத்தினவேல் அவர் வேலை பார்த்த திருப்பூரில் இருந்து கொரோனா காலம் என்பதால் ஊருக்கு வந்திருந்தார் என்றும், 25.03.2020ம் தேதி மாலை சுமார் 06.00மணிக்கு நான், மணிகண்டன் என்ற மணி, நல்லுச்சாமி, ரகுபதி ஆகிய நாங்கள் எங்கள் ஊர் தேவேந்திர குல வேளாளர் சாவடி அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது இறந்த இரத்தினவேல் அப்பா வெள்ளபாண்டி சாவடி முன்பு நடந்து சென்ற போது, சந்தானம், அவரது அப்பா செல்லக்கண்ணு, சந்தானத்தின் தாயார்அன்னக்கிளி ஆகியோர்கள் மூவரும் வழிமறித்து ஏன்டா தேவிடியா மகனே உனது மகனால் தான் எனது மகன் வேலை போய்விட்டது என்று கூறி உனது கொல்லாமல் விடமாட்டோம் என்று அசிங்கமாக பேசி சப்தம் போட்டார்கள் என்றும், அப்போது சந்தானம் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்துக்கொண்டு

வெள்ளை பாண்டியை பார்த்து உனது மகனை வரச்சொல் என்று சப்தம் போட்டு கொண்டிருந்தார்கள் என்றும், சப்தம் கேட்டு வெள்ளை பாண்டி, அவருடைய மனைவி, அவருடைய மகள் ராதிகா மற்றும் இரத்தினவேல் ஆகியோர்கள் அங்கு வந்தார்கள் என்றும், அப்போது இரத்தினவேலுவை பார்த்து உன்னால் தாண்டா எனக்கு வேலை போச்சு நீ உயிரோடு இருக்க கூடாது என்று சொல்லி சந்தனம் அவர் கையில் வைத்திருந்த கத்தியால் இரத்தினவேலுவின் வலது மார்பகத்திற்கு மேலும், இடது பக்க விலாவிலும் குத்தினார் என்றும், செல்லக்கண்ணு அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து இரத்தினவேலுவின் இடது பக்க முதுகில் குத்தினார் என்றும், அப்போது இரத்தினவேல் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே சாய்ந்துவிட்டார் என்றும், சம்பவ இடத்திற்கு நான், நல்லுச்சாமி, மணிகண்டன் என்ற மணி மற்றும் ரகுபதி ஆகியோர்கள் சப்தம் கேட்டு அங்கு ஓடிய போது மேற்படி மூவரும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள் என்றும், பின்னர் நாங்கள் இரத்தினவேலுவை நாங்கள் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு வழக்கு சம்பவத்தை பார்ததை பொறுத்த அளவில் மட்டும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை மட்டும் தான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்று பார்த்த போது இருட்டாக இருந்தது. நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு தான், இறந்து போன இரத்தினவேலுவின்

குடும்ப அங்கத்தினர்களான அவருடைய பெற்றோர்கள், **அ.சா.2** ராதிகா ஆகியோர்கள் அங்கு வந்தனர்.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:46:53 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.